தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 22, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 அக்டோபர் 9, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு."

செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீயவழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், திருமதி கே. பழனியம்மாள், திரு. வெ.அ. ஆண்டமுத்து ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. இ.ஏ. லியாவுதீன் சேட் அவர்கள் 17-8-2022 அன்றும், திருமதி கே. பழனியம்மாள் அவர்கள் 25-4-2023 அன்றும் மற்றும் திரு. வெ.அ. ஆண்டமுத்து அவர்கள் 25-8-2023 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட் அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் அரவக்குறிச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திருமதி கே. பழனியம்மாள் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் ராசிபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. வெ.அ. ஆண்டமுத்து அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் பவானிசாகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. பிரகாஷ் சிங் பாதல், பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதுபெரும் அரசியல் தலைவரான திரு. பிரகாஷ் சிங் பாதல் அவர்கள் 25–4–2023 அன்று தனது 95–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

பஞ்சாப் மாநில நலனில் மிகுந்த பற்று கொண்டவராகத் திகழ்ந்த திரு. பிரகாஷ் சிங் பாதல் அவர்கள் ஐந்து முறை அம்மாநில முதலமைச்சராகப் பணியாற்றியவர். மேலும், ஒன்றிய அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.